செய்தி வெளியீடு எண். 130 நாள்: 07.03.2018

# திருவள்ளூர் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டிற்க்கான அரசுப் பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

திருவள்ளூர் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டிற்க்கான அரசுப் பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.03.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மார்ச் 2018 முதல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இத்தேர்வு 07.03.2018 முதல் 16.04.2018 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வில் மேல்நிலை முதலாமாண்டில் 20,188 ஆண்களும், 22,739 பெண்களும் ஆக மொத்தம் 42,927 தேர்வு எழுதவுள்ளனர். இதில் பூந்தமல்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 28 மாணவர்களும் முகப்பேர் (மேற்கு) நேத்ரோதயா மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 5 பார்வையற்ற மாணவர்களும் தேர்வெழுதுகின்றனர். இத்தேர்வுகளுக்கு 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேல்நிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 17 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டுக்கு தனித்தனியாக அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த முதுகலை ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 68 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வினாத்தாட்கள் அனைத்தும் அரசுத்தேர்வுகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு அந்தந்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் வைக்கப்பட்டு ஆயதம் ஏந்திய காவலர்கள் மேற்பார்வையில் பாதுகாப்பாக உள்ளது. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் போதுமான அளவு பெறப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 113 தேர்வு மையங்களுக்கும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த முதுகலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2306 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வர்.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 31 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 62 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வர்கள் தேர்வு எழுதும் போது தேர்வைறக்குள் அனுமதிக்கப்படாத ஆவணங்கள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷு, பென்டிரைவர், பெல்ட் மற்றும் பர்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். த. இராஜேந்திரன் மற்றும் பள்ளிகல்வித் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**